# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## மானியக் கோரிக்கை எண் – 45

## அறிவிப்புகள் 2018–2019

**Dr. V. சரோஜா**

சமூக நலம் மற்றும்
சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## புதிய அறிவிப்புகள் 2018 – 2019

### 1. 1,132 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 1.13 கோடி செலவில் தேவையான குடிநீர் வசதி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 46,397 அங்கன்வாடி மையங்கள் சொந்த கட்டடங்களிலும் மற்றும் இதர அரசு கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும், மையங்களுக்கு தற்போது உள்ள தண்ணீர் வசதியை மேம்படுத்தவும் 1,132 மையங்களுக்கு, ரூபாய் 1.13 கோடி செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 2. சென்னை மாவட்டத்திற்கு கூடுதலாக இரண்டு புதிய குழந்தை நலக் குழுக்கள் (Child Welfare Committee) ஏற்படுத்தப்படும்.

குழந்தை நலக் குழுக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளைத் தீர்வு செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும் குழந்தை நலக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

பெருகி வரும் மக்கள் தொகை காரணமாக சென்னை மாவட்ட குழந்தை நலக் குழு அதிக எண்ணிக்கையிலான வழக்குகளைக் கையாள வேண்டியுள்ளது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு ஏதுவாக சென்னை மாவட்டத்திற்கு கூடுதலாக இரண்டு புதிய குழந்தை நலக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதற்கு ஓராண்டிற்கு கூடுதலாக ரூபாய் 21.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. மூன்றாம் பாலினரின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில், அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு வழங்கப்பட்டு வரும் அரசு மானியம் ரூபாய் 20,000லிருந்து ரூபாய் 50,000 ஆக உயர்த்தப்படும்.**

மூன்றாம் பாலினரின் சமூக, பொருளாதார நிலையை உயாத்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியத்தின் மூலம் எடுத்து வருகின்றது.

மூன்றாம் பாலினர் தங்களது வாழ்வாதாரத்தைப் பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல் போன்ற தொழில் செய்ய தனி நபர் ஒருவருக்கு ரூபாய் 20,000 வீதம் மானியமாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

மூன்றாம் பாலினரின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இவ்வரசு **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** இம்மானியத்தை ரூபாய் **50,000** ஆக உயர்த்தி, ஆண்டொன்றுக்கு **150** மூன்றாம் பாலினர் பயன்பெறும் வகையில் ரூபாய் **75.00** இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**4. திருமண நிதியுதவி மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கு சமூக நலத் துறையின் கள அலுவலர்களுக்கு மென்பொருளுடன் கூடிய கையடக்க கணினி (Tablet) ரூபாய் 2.52 கோடி செலவில் வழங்கப்படும்.**

சமூக நலத் துறையானது பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனிற்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக திருமண நிதியுதவித் திட்டங்கள் மற்றும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் ஆகியன துறையின் வரவு செலவுத் திட்டத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது.

2015 ஆம் ஆண்டு முதல் இத்திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இ–சேவை மையங்கள் மூலம் வட்டார அளவில் பதிவு செய்யப்பட்டு, கள அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு,

சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரால் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாவட்ட சமூக நல அலுவலர்களால் விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை மின்னணு பரிமாற்ற சேவை மூலம் (ECS) வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பயனாளிகள் இத்திட்டங்களின் கீழ் பயனடைகின்றனர். எனவே, விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் 1,074 சமுதாய விரிவாக்க அலுவலர் மற்றும் மகளிர் ஊர்நல அலுவலர்களின் பணியைத் துரிதப்படுத்தவும், தாமதத்தைத் தவிர்க்கவும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 2.52 கோடி செலவில் மென்பொருளுடன் கூடிய கையடக்க கணினி (Tablet) வழங்கப்படும்.

**5. பெரம்பலூர், நாமக்கல், கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருவள்ளூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்களுக்கு (சத்துணவு) 7 புதிய வாகனங்கள் ரூபாய் 54 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் செயலாக்கம் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் சத்துணவு நேர்முக உதவியாளர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு மாதத்தில் குறைந்தபட்சம் 20 சத்துணவு மையங்கள் ஆய்வு செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** பெரம்பலூர், நாமக்கல்,

கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருவள்ளூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக ரூபாய் **54.00** இலட்சம் செலவில் **7** புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

## 6. சத்துணவில் முட்டை சாப்பிடாத பயனாளிகளுக்கு வழங்கப்படும் வாழைப் பழத்தின் விலை ரூபாய் 1.25 லிருந்து ரூபாய் 3.50 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் பயனாளிகளது புரதச் சத்தினை மேம்படுத்த அவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் 45 முதல் 52 கிராம் எடையுள்ள முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. முட்டை உண்ண விரும்பாத குழந்தைகளுக்கு மாற்று உணவாக ரூபாய் 1.25–க்கு மிகாமல் 100 கிராம் வாழைப்பழம் வழங்க அரசாணை (நிலை) எண் 85 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 14.07.2008 வாயிலாக ஆணை வழங்கப்பட்டுள்ளது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தற்போது, ஒரு வாழைப்பழத்திற்கான செலவினத்தினை ரூபாய் 1.25லிருந்து ரூபாய் 3.50 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால், 12,946 பயனாளிகள் ரூபாய் 61.17 இலட்சம் செலவில் பயனடைவர்.

**7. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 43,205 சத்துணவு மையங்களுக்கு சோப்பு, நகவெட்டி, துண்டு, கையுறைகள் போன்றவை உள்ளடக்கிய சுகாதார பேழைகள் (Hygiene Kits) ரூபாய் 1.73 கோடி செலவில் வழங்கப்படும்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 52 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் 43,205 சத்துணவு மையங்கள் வாயிலாக பயனடைந்து வருகின்றனர். இவர்களுக்கு பள்ளி வளாகத்தினுள்ளேயே சுவையான சத்தான கலவை சாதங்கள் பலவித மசாலா முட்டையுடன் அனைத்து பள்ளி நாட்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. உணவு சமைக்கும் போதும், பரிமாறும் போதும் சுகாதாரத்தினை கடைப்பிடிக்க சத்துணவு சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு மையம் ஒன்றுக்கு ரூபாய் 400 செலவில் சோப்பு, நகவெட்டி, துண்டு, கையுறைகள் போன்றவை உள்ளடக்கிய சுகாதார பேழைகள்

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** அனைத்து சத்துணவு மையங்களுக்கும் ரூபாய் **1.73** கோடி செலவில் வழங்கப்படும்.

**8. அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளின் உணவூட்டு செலவினம் மாதம் ரூபாய் 450 லிருந்து ரூபாய் 900 ஆக உயர்த்தப்படும்.**

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்டு, குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு, பராமரிப்பு அளிக்கும் வகையில் அரசு சேவை இல்லங்கள் சமூக நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு சூழல்களால் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பெண்கள் அவ்விடத்திலேயே குழந்தைகளுடன் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** சமூக நல ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு சேவை இல்லங்களில் உள்ள குழந்தைகளின் உணவூட்டுச் செலவினம் மாதம் ரூபாய் **450** லிருந்து ரூபாய் **900** ஆகவும், வருடாந்திர பராமரிப்புச் செலவினம் ரூபாய் **150** லிருந்து ரூபாய் **500** ஆகவும் உயர்த்தப்படும். இதனால் ஓராண்டிற்கு அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூபாய் **53.68** இலட்சம் ஆகும்.

**9. முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களில் பயன்பெறும் முதியோர்களுக்கு மாதாந்திர உணவூட்டுச் செலவினம் ரூபாய் 1200 ஆகவும், குழந்தைகளுக்கான மாதாந்திர உணவூட்டுச் செலவினம் ரூபாய் 900 ஆகவும் உயர்த்தப்படும்.**

முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கிடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய 51 ஒருங்கிணைந்த வளாகங்கள் 29 மாவட்டங்களில் மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

25 முதியோர்களை உள்ளடக்கிய முதியோர் இல்லத்திற்கு உணவூட்டு மானியமாக ஒரு முதியோருக்கு ரூபாய் 653-ம் மற்றும் 25 குழந்தைகளை உள்ளடக்கிய குழந்தைகள்

இல்லத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 750–ம் வழங்கப்பட்டு, இதர செலவினங்களோடு ஒரு வருடத்திற்கு தொடரும் செலவினம் ரூபாய் 18.40 இலட்சம் தொகையில் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கிடையே 75:25 என்ற விகிதத்தில் அரசு மானியமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தற்போது, ஒருங்கிணைந்த வளாகங்களில் செயல்படும் முதியோர் இல்லங்களுக்கான உணவூட்டு மானியம் ரூபாய் 653-லிருந்து ரூபாய் 1200-ஆக உயர்த்தியும், குழந்தைகள் இல்லங்களுக்கு ரூபாய் 750-லிருந்து ரூபாய் 900-ஆக உயர்த்தியும் வழங்கப்படும்.

ஒருங்கிணைந்த வளாகங்களில் செயல்படும் முதியோர் இல்லங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்களுக்கு உணவூட்டு செலவினம் உயர்த்தப்படுவதால், ஆண்டொன்றுக்கு ரூபாய் **106.64** இலட்சம் அரசிற்கு கூடுதல் செலவினம் ஏற்படும்.

**Dr. V. சரோஜா**
**சமூக நலம் மற்றும்**
**சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர்**